




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION

Services / சேவைகள்

✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT

9080999823
7695883647

வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 308 01.05.2026 FRIDAY CHITHIRAI: 18 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 308 01.05.2026 வெள்ளிக்கிழமை சித்திரை : 18 விலை : ரூ.5/-


# "கருத்துக் கணிப்புகள் பின்னணியில் சூழ்ச்சி"




## உலகை இயக்கும் அச்சாணிகளுக்கு "சக்கர வியூகம்" சமர்ப்பிக்கும் சல்யூட்!

உலகை இயக்கும் மகா சக்தியே... உழைப்பாளர்களே!

உங்கள் கரங்கள் அசையாமல், காலச் சக்கரம் சுழலாது.

எரிக்கும் வெயிலையும், கடின உழைப்பையும் ஏந்தியபடி,

நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் அத்தனைத் தொழிலாளர்களுக்கும்,

"சக்கர வியூகம்" நாளிதழ் தனது நெஞ்சார்ந்த மே தின வாழ்த்துகளைத் தெரிவிக்கிறது.

வெறும் வாழ்த்தோடு நில்லாமல், உங்கள் உரிமைகளுக்காகவும்,

வாழ்வாதாரப் போராட்டங்களுக்காகவும் என்றும் குரல் கொடுக்கும்

உற்றத் தோழனாக எங்களது எழுத்துக்கள் தொடரும்.

வியர்வை சிந்தும் ஒவ்வொரு துளியும் வைரங்களாக மின்னட்டும்!

உழைப்பால் உயர்வோம்... உரிமையால் வெல்வோம்!

சக்கர வியூகம் நாளிதழ் குடும்பம்.

## புதுச்சேரி சிறுமி கொலை வழக்கு: கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பு; மே 5ல் தண்டனை விவரம் அறிவிப்பு



புதுச்சேரி: மே.1-

புதுச்சேரியை உலுக்கிய சிறுமி கொலை வழக்கில் கருணாஸ் குற்றவாளி என போக்சோ நீதிமன்றம் இன்று அறிவித்தது. வரும் மே 5ம் தேதி தண்டனை அறிவிக்கப்படுகிறது.

முத்தியால்பேட்டை சோலை நகரைச் சேர்ந்த 5ம் வகுப்பு படித்த 9 வயது சிறுமி கடந்த 2024 மார்ச் 2ம் தேதி வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென மாயமானார். 2 நாட்களுக்குப்பின் அருகே உள்ள வாய்க்காலில் கை, கால்கள் கட்டப்பட்டு போர்வையால் சுற்றப்பட்ட நிலையில், பிணமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் புதுச்சேரியை உலுக்கியது. முத்தியால்பேட்டை போலீஸார் வழக்கு பதிவு செய்து, அதே பகுதியைச் சேர்ந்த கருணாஸ் (19), விவேகானந்தன் (59) ஆகியோரை போக்சோ வழக்கில் கைது செய்தனர். இவ்வழக்கு தொடர்பாக 540 பக்க குற்றப்பத்திரிகையை போலீஸார் தாக்கல் செய்தனர்.

இதில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விவேகானந்தன் கடந்த 2024 செப்டம்பரில் கழிவறையில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். தொடர்ந்து வழக்கு போக்சோ விரைவு நீதிமன்றத்தில் நீதிபதி சுமதி முன்பாக நடந்தது. விசாரணை முடிந்த நிலையில் இன்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிபதி சுமதி, குற்றம் சாட்டப்பட்ட கருணாஸை குற்றவாளி என அறிவித்தார். வரும் மே 5ம் தேதி இரு தரப்பு வாதத்துக்கு பிறகு தண்டனை விவரத்தை அறிவிப்பதாக தெரிவித்தார்.

இவ்வழக்குதொடர்பாக அரசு தரப்பு வழக்கறிஞர் பச்சையப்பன் கூறியதாவது: பாலியல் நோக்கில் குழந்தை கடத்தல், குழந்தையை அடைத்து வைத்தல், கொலை செய்தல் ஆகிய பிரிவுகளிலும் தடயம் ஆதாரம் மறைத்து வைத்தல் மற்றும் போக்சோ சட்டம் 6ன் கீழ் கருணாஸ் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கில் மரணத்தண்டனைக்கான குற்றங்களுக்கான பிரிவுகள் இருக்கிறது. அரிதினும் அரிதான வழக்கு என உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் படி அரசு தரப்பு, எதிர்தரப்பு விவாதங்களுக்கு பிறகு தண்டனை விவரம் தெரிவிப்பார்கள்.

அரசு தரப்பில் குற்றவாளிக்கு மரணதண்டனைதான் தீர்வு என வாதங்கள் வைத்துள்ளோம். வாதங்கள் கடந்த 15 முதல் 17 வரை நடந்தது. எழுத்துப்பூர்வ வாதங்களையும் எடுத்து வைத்துள்ளோம்.

இவ்வழக்கில் புதுச்சேரி வழக்கறிஞர்கள் எதிர்தரப்புக்கு ஆஜராகவில்லை. இலவச சட்ட உதவி மையம் மூலம் விழுப்புரம் வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டோர் தரப்புக்காக நீதிமன்றம் நியமித்தது. அரசு தரப்பு சாட்சியங்கள் 54 பேரை விசாரித்தோம். 80 ஆவணங்கள், பாதிக்கப்பட்ட சிறுமி செருப்பு, ஆடை, முடி, கைப்பற்றப்பட்ட உயிரி மாதிரிங்கள் சான்று பொருட்களாக சமர்பித்தோம்.

கடந்த 2024 நவம்பரில் சாட்சி விசாரணை தொடங்கியது. இவ்வழக்கில் 54 சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்டன.குற்றம் சாட்டப்பட்ட விவேகானந்தன் தற்கொலை செய்ததால் அவர் மீது இவ்வழக்கில் இருந்த எஸ்சிஎஸ்டி வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் எடுக்கப்பட்டன. மேலும் குற்றம் சாட்டப்பட்டோர் செல்போனில் ஆபாச வீடியோக்கள், உயிர் மாதிரிகள் கிடைத்தன.

முக்கிய வழக்குகளில் பாலியல் குற்றங்கள் மற்றும் போக்சோ வழக்குகளில் கூட்டு பாலியல் வன்கொடுமை, குழந்தை இறப்பு, குழந்தை 12 வயதுக்கு கீழ் இருப்பது ஆகிய மூன்று குற்றங்கள் அடிப்படையில் இவ் வழக்கு இருக்கிறது. அதனால் தண்டனையை உடன் அறிவிக்க இயலாது.

வழக்குகளில் குற்றவாளி தீர்ப்பு வந்த பிறகு என வந்த பிறகு தண்டனை குறைக்க குற்றவாளி தரப்பும், அதிகபட்ச தண்டனை தர அரசு தரப்பும் வாதம் செய்யவுள்ளனர். அதன்பிறகுதான் தண்டனை விவரம் அறிவிக்கப்படும்" என்றார். இவ்வழக்கு விசாரணை பார்ப்பதற்காக சிறுமி பெற்றோர், உறவினர்கள் நீதிமன்றம் வந்திருந்தனர்.

## திமுகவுக்கு எதிராக பழனிசாமி கொந்தளிப்பு



சென்னை: மே.1-

"திமுகவின் பித்தலாட்ட நாடகம் ஒருபோதும் எடுபடாது. ஒவ்வொரு தேர்தலின்போதும் கருத்துக் கணிப்புகளை உடைத்தெறிந்து, வீறுகொண்டு எழுவதுதான் அதிமுகவின் தனித் தன்மை'' என அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கொந்தளிப்புடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23 அன்று நடந்து முடிந்துள்ள நிலையில், கருத்துக் கணிப்புகள் என்ற பெயரில் பொய் தகவல்களைப் பரப்பி, தமிழக மக்களையும் அதிமுக தொண்டர்களையும் திசை திருப்பும் வேலையை, தில்லுமுல்லு முன்னேற்றக் கழகத்தினர் திட்டமிட்டு செய்து வருகின்றனர். எனவே, தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பு முடிவுகளைக் கண்டு யாரும் கலங்கத் தேவையில்லை. திமுகவின் பித்தலாட்ட நாடகம் ஒருபோதும் எடுபடாது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த எம்ஜிஆர்.; கழகத்தை இரும்புக் கோட்டையாக மாற்றிய ஜெயலலிதா, ஆகிய இருபெரும் காவல் தெய்வங்கள் நம்மை காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, நமக்கு எதிரான கருத்துக் கணிப்புகளைக் கண்டு யாரும் மனம் தளர வேண்டாம். கருத்துக் கணிப்புகள் அப்படியே நடந்ததாக வரலாறு கிடையாது. எல்லா கருத்துக் கணிப்புகளையும் உடைத்தே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை ஆட்சி அமைத்திருக்கிறது.

2006 முதல் 2011 வரையிலான மைனாரிட்டி திமுக ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர, 2011 ஏப்ரல் மாதம் 13ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. அச்சமயம் சில கருத்துக் கணிப்புகள் திமுக ஆட்சி தொடரும் என்றது; சில கருத்துக் கணிப்புகள் மட்டுமே அதிமுக வெற்றி பெற வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தன.

அதுகுறித்து ஜெயலலிதாவிடம் ஊடகங்கள் கேள்வி கேட்டபோது, "218 தொகுதிகளுக்குக் குறையாமல் வெற்றி பெறுவோம்'' என்று உறுதிபடத் தெரிவித்தார்கள். சொன்னபடியே அதிமுக கூட்டணி 203 இடங்களில் வென்று, ஜெயலலிதா மீண்டும் ஆட்சியில் அமர்ந்தார். அந்தத் தேர்தலில் திமுக 23 தொகுதிகளை மட்டுமே பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்துகூட கிடைக்கப்பெறாமல் அதல பாதாளத்துக்கு தள்ளப்பட்டது.

2016லும் இதேபோன்று கருத்துக் கணிப்பு சொல்லப்பட்டது. அதைப் பொய்யாக்கி மீண்டும் அதிமுக ஆட்சி அமைத்தது. இதுதான் வரலாறு. ஒவ்வொரு தேர்தலின்போதும் கருத்துக் கணிப்புகளை உடைத்தெறிந்து, வீறுகொண்டு எழுவதுதான் அதிமுகவின் தனித் தன்மை. இந்தத் தேர்தலிலும் அத்தகைய வெற்றி கண்டிப்பாக தொடரும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 210 தொகுதிகளில் உறுதியாக வெல்லும். கழகம் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

அதே நேரம் 'தோற்கப்போகிறோம்' என்பது ஸ்டாலினுக்குத் தெரிந்துவிட்டது. எனவே, இப்படியான கருத்துக் கணிப்புகளை திட்டமிட்டு வெளியிடுவதற்கு பின்னணியில் சூழ்ச்சி இருப்பதற்கு வாய்ப்பு உண்டு.

அதாவது, திமுக வெல்லப்போகிறது என்ற மாய பிம்பத்தை உருவாக்கி, அதன் அடிப்படையில் வாக்கு எண்ணிக்கையில் தில்லுமுல்லு செய்வதற்கும், கலவரம் செய்து தமிழகத்தில் குழப்பத்தை உருவாக்குவதற்கும் திமுகவினர் முயற்சி செய்வார்கள்.

எனவே, மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடங்களில் அதிமுக தொண்டர்கள், பூத் ஏஜெண்ட்டுகள், வேட்பாளர்கள், நிர்வாகிகள், தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் அனைவரும் அதீத கவனத்துடன் செயல்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் மக்கள் விரோத, நிர்வாகத் திறனற்ற திமுக ஆட்சி ஒருபோதும் அமையப்போவதில்லை. மக்களின் நலனுக்காகவும், உயர்வுக்காகவும் மட்டுமே அல்லும் பகலும் அயராது பாடுபட்டுவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி நிச்சயம் மலரும்'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழக வாக்கு எண்ணிக்கையை பார்வையிட மே 2ல் தேர்தல் பார்வையாளர்கள் வருகை




சென்னை: மே.1-

தமிழகம் முழுவதும் 62 மையங்களில் மே 4ம் தேதி நடைபெறும் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட தேர்தல் பார்வையாளர்கள் மே 2ம் தேதி தமிழகம் வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் கடந்த ஏப்.23ம் தேதி தேர்தல் நடைபெற்றது. எவ்வித அசம்பாவிதம், மறு வாக்குப்பதிவும் இன்றி நடைபெற்று முடிந்த இந்த தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவு 85.10 சதவீதம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் இருந்து பதிவான வாக்குகள் அடங்கிய மின்னணு இயந்திரங்கள், விவிபாட் மற்றும் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், அந்தந்த தொகுதிகள் அடங்கிய வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள 'ஸ்டிராங்' அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஸ்டிராங் அறைகளுக்கு 4 அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், சிசிடிவி கேமரா மூலமும் கண்காணிக்கப்படுகிறது. தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு வந்த துணை ராணுவப் படையினரில் ஒரு பிரிவினர் அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர வாக்கு எண்ணிக்கை பாதுகாப்புக்காக 18 ஆயிரம் போலீஸார் பணிய மர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் வரும் மே 4ம் தேதி 62 மையங்களிலும் காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.

முதலில் தபால் வாக்கு எண்ணிக்கை தொடங்கப்படும். அதன் பின் மின்னணு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஆலோசனை

இந்நிலையில், தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு தொடர்பாக, நேற்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர் எஸ்.சாய்குமார் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது.

இதில் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக், ஆவடி காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்கா, தாம்பரம் காவல் ஆணையர் சஞ்சய்குமார் உள்ளிட்ட காவல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில், வாக்கு எண்ணிக்கை முடியும் வரை தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, வாக்கு எண்ணிக்கை நாளில் பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.

பார்வையாளர்கள் வருகை

சட்டப்பேரவைத் தேர்தலின் போது, ஏற்கெனவே சிறப்பு தேர்தல் பார்வையாளர் மற்றும் தொகுதிக்கு ஒரு தேர்தல் பார்வையாளர், காவல் துறை பார்வையாளர் மற்றும் செலவினப் பார்வையாளர்கள் என வெளி மாநில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் தேர்தல் பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட வரும் மே 2ம் தேதி தமிழகம் வருகின்றனர். 62 மையங்களிலும் பணியாற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கான தேர்வு அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் ஏற்கெனவே நடைபெற்று முடிந்துள்ளது.

இந்நிலையில், நேற்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தலைமையில், சென்னையில் 234 தொகுதிகளுக்குமான வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் நடைபெற்ற இதில், தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் உட்பட 3 பேர் என 234 தொகுதிகளுக்கும் சேர்த்து ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

புதுச்சேரி தேர்தல் அலுவலர் ஞானவேல் அனைவருக்கும் பயிற்சி அளித்தார். இதில் வாக்கு எண்ணிக்கை நடத்துவது, சுற்றுவாரியாக முடிவுகளை வெளியிடுவது, ஆவணங்களை பாதுகாப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கும் வாக்கு எண்ணிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினார். இதில், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சிவஞானம், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி வே.ஸ்ரீதர், இணை தலைமைத் தேர்தல் அதிகாரி ஆர்.மேனுவல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தஞ்சை அருகே விவசாய நிலத்திலிருந்து பழங்காலத்து சிலைகள் கண்டெடுப்பு



தஞ்சாவூர்: மே. 01-

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், மானம்பாடியில் உள்ள வயலில் இருந்து பழங்காலத்து சுவாமி சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. மானம்பாடி, பிரதான சாலையைச் சேர்ந்தவர் ஜோசப் மகன் அலக்ஸான்டர் (36). இவர், தனக்கு சொந்தமான வயலில் உள்ள வரப்பை வெட்டும்போது, அங்கு பழங்காலத்து சிலைகள் இருப்பதை கண்டறிந்தார்.

பின்னர், இது தொடர்பாக, அவர், கிராம நிர்வாக அலுவலர் லோகநாதனுக்கு தகவல் அளித்ததின் பேரில், அந்த இடத்திற்கு வந்த அவர், சுமார் ஒன்றரை அடி உயரம் கொண்ட யானை சிலை, 1, திருவாச்சி 1, சிறிய சுவாமி சிலைகள் 3, உடைந்த பானை 1 என மொத்தம் 6 எண்ணிக்கையில் உலோகத்தினாலான சிலைகளை சேகரித்தார். பின்னர், திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து வட்டாட்சியர் சாந்தமீனாவிடம், அந்த உலோகச் சிலைகளை வழங்கினார். இது தொடர்பாக வருவாய்த் துறையினர் கூறியது: கண்டெடுக்கப்பட்ட சிலைகள் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள், இங்கு வந்து சிலைகளை சேகரித்துக் கொள்வார்கள். பின்னர், தொல்லியியல் துறையினர், சிலைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டபின், இந்த சிலைகள் குறித்து தெரிய வரும் எனத் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் மே 4 வரை வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு



சென்னை::மே. 01-

தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மே 4ம் தேதி வரை வழக்கமான வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையத்தின் உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தெற்கு உள் கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை, தமிழகம் வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் ஒரு சில இடங்களில் இன்று முதல் மே2ம் தேதி வரை 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி கிருஷ்ணகிரி, திருச்சி ஆகிய 10 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். நாளை (மே 1) நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு ஆகிய 6 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.மே 2ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யக்கூடும்.மே 3, 4, 6 ஆகிய தேதிகளில் தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் ஓரிரு இடங்களிலும், மே 5,6 ஆகிய தேதிகளில் ஒரு சில இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.அதிகபட்ச வெப்பநிலை:தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் இன்று முதல் மே 4ம் தேதி வரை வழக்கமான வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும்.

அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசவுகரியம் ஏற்படலாம். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி முதல் 40 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 29 டிகிரி முதல் 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில், அசவுகரியம் ஏற்படலாம்.

மீனவர்களுக்கு எச்சரிக்கை: வடக்கு ஆந்திர கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மே 4ம் தேதி வரை மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும் இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும்.எனவே, இப்பகுதிகளில் மேற்படி நாட்களில், மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பத்தூர் தொகுதியில் 6 கிராமங்களில் மறு வாக்குப் பதிவு கோரிய வழக்கு தள்ளுபடி



புதுக்கோட்டை: மே. 01-

சிவகங்கை திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் மீண்டும் வாக்குப்பதிவு நடத்த கோரிய வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆர்.பாலகுறிச்சி, ஆர்.சீகம்பட்டி, ரெகுநாதபட்டி, வைரன்பட்டி, கோபால்பட்டி உள்ளிட்ட ஆறு கிராமங்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி நடத்த தேர்தலில், இந்த கிராம மக்கள் யாரும் வாக்களிக்கவில்லை. இதனால், இந்த கிராமங்களில் மறு வாக்குப் பதிவு நடத்தக் கோரி, பாலகுறிச்சியை சேர்ந்த பாஜக பிரமுகர் லட்சுமணன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், திருப்பத்தூர் தொகுதியில் தங்கள் கிராமத்தை சேர்த்துள்ளதால், நிர்வாக உதவிகள் கிடைப்பதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், ஆறு கிராமங்களை புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் சேர்க்க கோரி, பல ஆண்டுகளாக மனுக்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த தேர்தலில் 6 கிராமங்களைச் சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பதால், இந்த ஆறு கிராமங்களுக்கும் மீண்டும் புதிதாக வாக்குப் பதிவு நடத்த வேண்டும் என மனுவில் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, தேர்தலின் போது இந்த ஆறு கிராம மக்களை வாக்களிக்க விடாமல் யாரும் தடுக்கவில்லை. தேர்தல் முடிந்த பிறகு எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும் என கேள்வி எழுப்பி, இந்த வழக்கு செல்லதக்கதல்ல எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். திருப்பத்தூர் தொகுதியில் அமைச்சர் பெரிய கருப்பன் திமுக சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடதக்கது.

# பெங்களூருவில் கனமழை சுவர் இடிந்து 7 பேர் உயிரிழப்பு



பெங்களூரு:மே. 01-

பெங்களூருவில் நேற்று மாலை பெய்த ஆலங்கட்டி மழையால் பவுரிங் மருத்துவமனையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பெங்களூருவில் கடந்த இரு மாதங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில், நேற்று மாலை 5 மணியளவில் பலத்த இடி மின்னலுடன் ஆலங்கட்டி மழை பெய்தது. இதனால் சாலைகளிலும் ஐடி நிறுவனங்களிலும் சாலைகளில் பனிமழை பெய்தது போன்று காட்சியளித்தது. சிவாஜி நகர், கம்மனஹள்ளி, கிருஷ்ண ராஜபுரம், ராஜாஜி நகர், மெஜஸ்டிக், ஹெப்பால் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காற்றுடன் மாலை 7 மணி வரை கொட்டிய மழையால் ஆங்காங்கே சாலையோர மரங்களும் மின் கம்பங்களும் சாய்ந்தன. சிவாஜி நகரில் உள்ள பழமையான பவுரிங் மருத்துவமனையின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது. இதில் சாலையோர கடைக்காரர்களும், மழைக்கு ஒதுங்கியவர்களும் சிக்கிக் கொண்டனர். இந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட 7 பேர் சம்பவ இடத்திலே உயிரிழந்தனர். இதுகுறித்து தகவலறிந்த போலீஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணிகளை முடுக்கி விட்டனர். முதல்வர் சித்தராமையா மழை பெய்து கொண்டிருந்தபோதே சம்பவ இடத்தை பார்வையிட்டார். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறியதுடன் உரிய நிவாரணம் அறிவிக்கப்படும் என்றார்.



# நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்ந்த சட்டக்கல்லூரி மாணவர்கள் தேர்வு எழுத அனுமதி

மதுரை: மே.01-

சட்டக் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்ந்த மாணவர்கள் தேர்வு எழுத உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பாளையங்கோட்டை ஆரியகுளம் பகுதியைச் சேர்ந்த ஷைனி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: கீழவல்லநாட்டில் மகளிர் சட்டக் கல்லூரி உள்ளது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டில் தலா 60 மாணவர்களை சேர்க்க பல்கலைக் கழகம் அனுமதி வழங்கியுள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

நான் 202526 ஆண்டில் நிர்வாக ஒதுக்கீட்டு இடத்தில் சேர்ந்தேன். தேர்வுக்கு தயாராகி வந்த நிலையில், 60 மாணவர்களுக்கு மட்டும் தேர்வு எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நான் உட்பட மீதமுள்ள மாணவர்கள் தேர்வு எழுத அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்லூரி நிர்வாக ஒதுக்கீட்டில் என்னைப் போல் பல்வேறு மாணவர்கள் சேர்ந்துள்ளனர். தற்போது தேர்வு நெருங்கும் நிலையில் எங்களுக்கு தேர்வு எழுதவும் தேர்வுக் கட்டணம் செலுத்தவும் அனுமதிக்கவில்லை.

இதனால் எங்களின் கல்வி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே 2025ஸ்ரீ2026 கல்வியாண்டுக்கான சட்டக்கல்வித் தேர்வில் பங்கேற்க அனுமதிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

இதே கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு சட்டக் கல்லூரிகளின் மாணவிகளும் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை நீதிபதி மும்மினேனி சுதீர்குமார் விசாரித்தார்.

பின்னர் நீதிபதி, மாணவ மாணவியர்கள் பல்கலைக் கழக தேர்வு எழுத அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் அனுமதிக்க வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை முடித்து வைத்தார்.

# 4 பேர் உயிரிழந்த நிலையில் நவி மும்பையில் தர்பூசணி விலை கடும் வீழ்ச்சி

மும்பை:மே. 01-

தெற்கு மும்பையைச் சேர்ந்த அப்துல்லா டோகாடியா (40), அவரது மனைவி நஸ்ரின் (35), மகள்கள் ஆயிஷா (16) மற்றும் ஜைனப் (13) ஆகியோர் கடந்த சனிக்கிழமை இரவு வீட்டில் நடந்த உறவினர்கள் சந்திப்புக்குப் பிறகு தர்பூசணி பழம் சாப்பிட்டனர். அதன் பிறகு அனைவருக்கும் கடுமையான வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. சிகிச்சை பலனின்றி சில மணி நேரங்களிலேயே 4 பேரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களின் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு வெளியான பூர்வாங்க அறிக்கையில், உணவு நச்சு காரணமாக அவர்களின் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என கூறப்பட்டுள்ளது.இந்த சூழ்நிலையில், கோடை காலத்தில் தர்பூசணி அதிக அளவில் விற்பனையாகும் பழமாக இருந்தபோதிலும், ஆசியாவின் மிகப்பெரிய மொத்த விவசாய சந்தைகளில் ஒன்றான நவி மும்பை வேளாண் உற்பத்தி சந்தையில் (ஏபிஎம்சி) தற்போது அதன் தேவை திடீரென சரிந்துள்ளது.ஒரு கிலோ தர்பூசணி ரூ.5 முதல் ரூ.7 வரை மட்டுமே விற்கப்படுவதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தைச் சந்திப்பதாகத் தெரிவிக்கின்றனர். பொதுவாக, இதன் மொத்த விற்பனை விலை ரூ.10 முதல் ரூ.35 ஆகவும், சில்லறை விற்பனை விலை ரூ.30 முதல் ரூ.100 வரையிலும் இருக்கும்.ஆனால், தர்பூசணி சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்ததால் அதை வாங்குவதை பொதுமக்கள் தவிர்ப்பதாகக் கூறப்படுகிறது.

# ஓசூர் அருகே ஏழைகளுக்கான அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம் முடக்கம்



ஓசூர்:மே. 01-

மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவையொட்டி, ஓசூர் அருகே புனுகன்தொட்டி கிராமத்தில் ஏழைகளுக்காக தொடங்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம் முடங்கியுள்ள நிலையில், கட்டிடங்கள் பாழாகும் நிலை ஏற்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவையொட்டி, கடந்த 2017ம் ஆண்டு வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், நீர்நிலைகள் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களை மறுகுடியமர்த்தும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் ஓசூர் அருகே புனுகன்தொட்டி கிராமத்தில் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் 336 குடியிருப்புகளுடன் அடுக்குமாடி கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

இப்பணி 10 சதவீதம் நிறைவடைந்த நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், இப்பணி முடங்கியது. மீண்டும் 2021ல் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கின. 2022ல் வீடுகள் ஒதுக்கீட்டிற்கு பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.ஆனால், தற்போது வரை 50 சதவீதம் வரை மட்டுமே பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும், குடியிருப்பு பகுதியில் குடிநீர் கழிவுநீர் கால்வாய், சாலை உள்ளிட்ட வசதிகள் மற்றும் மின் இணைப்பு உள்ளிட்ட பணிகள் நிறைவடையாமல் உள்ளன. இதனால், உரிய பராமரிப்பின்றி கட்டிடங்கள் பாழாகும் நிலை ஏற்பட்டிருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுதொடர்பாக சமூக ஆர்வலர்கள் சிலர் கூறியதாவது: அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம் தொடங்கிய நிலையில் கரோனா காலத்தால் நிதி ஒதுக்கீடு தாமதம் மற்றும் ஒப்பந்ததாரர் மாற்றம் உள்ளிட்ட காரணங்கள் பணி முடங்கியுள்ளது. இதனால், கட்டி முடிக்கப்பட்ட சில கட்டிடங்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன.மேலும், காலதாமதத்தால் உரிய பராமரிப்பின்றி கட்டிடத்தின் உறுதித்தன்மை சீர்குலையும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளை துரிதப்படுத்தினால் ஓராண்டு வரை பணி நிறைவடையும் நிலையுள்ளது.வாடகை வீட்டில் வசிக்கும் ஏழை குடும்பத்தினர் அடுக்குமாடி குடியிருப்புகள் பெரும் வரப்பிரசாதமாக இருக்கும் என எதிர்பார்த்த நிலையில் தற்போது ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

எனவே, மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உடனடியாகத் தலையிட்டு, விடுபட்ட பணிகளை போர்க்கால அடிப்படையில் நிறைவு செய்து பயனாளிகளைத் தேர்வு செய்து வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சாத்தான்குளம் வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் ஜூன் 1க்குள் மேல்முறையீடு செய்யலாம்: ஐகோர்ட்



மதுரை,மே.01-

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போலீஸார் 9 பேரும் ஜூன் 1க்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சாத்தான்குளம் ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020ல் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த போது சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர்.இது தொடர்பாக கொலை வழக்கு பதிவு செய்து அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், மேலும், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமை காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது செய்தது.

இந்த வழக்கை மதுரை மாவட்ட நீதிமன்றம் விசாரித்து ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்தது. தூக்கு தண்டனையை உறுதிப்படுத்தக்கோரி தமிழக அரசு மற்றும் சிபிஐ தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உட்பட 9 பேரும் சிறையில் இருந்தபடி காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் ஆஜராகினர். அப்போது நீதிபதிகள், 9 பேரிடமும் வழக்கறிஞர்கள் நியமனம் செய்துள்ளீர்களா? எனக் கேட்டார். அதற்கு, அடுத்த விசாரணைக்குள் வழக்கறிஞர் நியமித்துவிடுவோம் என பதிலளித்தனர். இதையடுத்து சிபிஐ மேல்முறையீடு மனுவின் நகலை குற்றவாளிகளுக்கு வழங்க பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். முதல் குற்றவாளியான ஸ்ரீதர், மேல்முறையீட்டு மனுவை தயார் செய்ய 15 நாள் விடுப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்தார். அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மேல்முறையீடு மனு தயாரிக்க சிறைத்துறை போதிய வசதிகளை செய்து தரும்.சிறையில் அனைத்து வசதிகளும் உள்ளது. எனவே விடுமுறை தேவையில்லை என்றனர்.தொடர்ந்து நீதிபதிகள், இந்த வழக்கு தமிழகம் முழுவதும் உற்றுநோக்கப்படும் வழக்காகும். எனவே, ஜூன் 1க்குள் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்யுங்கள். ஜூன் 4 முதல் தினமும் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். விசாரணை ஜூன் 4க்கு ஒத்திவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# 3வது பிரசவத்துக்கு 12 வாரங்கள் விடுப்பு வழங்கும் அரசாணை உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிரானது: ஐகோர்ட்



சென்னை:மே. 01-

மூன்றாவது பிரசவத்துக்கும் ஓராண்டு விடுப்பு வழங்க வேண்டுமென்றும், 12 வாரங்கள் மட்டும் விடுப்பு வழங்கும் அரசாணை உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரானது என்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் பணியாற்றும் சாய்நிஷா என்பவர் தனது 3வது பிரசவத்துக்காக 2026 பிப்ரவரி முதல் 2027 பிப்ரவரி வரை மகப்பேறு விடுப்பு வழங்கக்கோரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

ஆனால் அதை ஏற்க மறுத்த மாவட்ட முதன்மை நீதிபதி, 3வது பிரசவத்துக்கு 12 வாரங்கள் மட்டுமே விடுப்பு வழங்க முடியும் என்ற அரசாணைப்படி ஏப்ரல் மாதத்துக்குள் பணியில் சேரும்படி சாய் நிஷாவுக்கு உத்தரவிட்டார்.

வலியும், வேதனையும் இதை எதிர்த்து சாய் நிஷா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், என்.செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு, 3வது பிரசவமும் முதல் இரு பிரசவங்களைப் போல வலியும், வேதனையும் அடங்கியதுதான்.இதைக் கருத்தில் கொண்டே உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அரசு பெண் ஊழியர்களின் மூன்றாவது குழந்தைக்கும் ஓராண்டு காலம் மகப்பேறு விடுப்பு வழங்க உத்தரவிட்டுள்ளது.

எனவே மனுதாரருக்கு ஓராண்டு காலத்துக்கு மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும் என விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதிக்கு உத்தரவிட்டுள்ளனர்.3வது பிரசவத்துக்கு 12 வாரங்களுக்கு மட்டும் விடுப்பு வழங்க வேண்டுமென்ற அரசாணை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரானது. அரசின் இந்த அரசாணை நீதித்துறையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் உத்தரவிட்டுள்ளனர்.

# மதுரை சித்திரை திருவிழாவில் குப்பை தேங்காமல் சுகாதாரமாக நடந்த தேரோட்டம்!



மதுரை: மே. 01-

மதுரை சித்திரைத் திருவிழாவில் கடந்த ஆண்டைப்போல், மாநகராட்சி ஆணையர் சித்ராவின் ஏற்பாட்டில் 350 தூய்மைப் பணியாளர்கள் குழுவினர் தேருக்கு முன்னும், பின்னும் சென்று குப்பையை உடனுக்குடன் அகற்றி அப்புறப் படுத்தினர்.

இதனால் குப்பையில்லாமல் சுகாதாரமான தேர்த் திருவிழாவை வெற்றிகரமாக நடத்திக் காட்டிய மாநகராட்சி நிர்வாகத்துக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரைத் திருவிழா, கடந்த 10 நாட்களாக நடந்து வருகிறது.

இந்த விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்ட விழா, நேற்று காலை மாசி வீதிகளில் கோலாகலமாக நடந்தது. கீழமாசி வீதியில் உள்ள தேரடியில் இருந்து காலை 6.30 மணிக்கு தேர் புறப்பட்டது. பக்தர்கள், பூக்கள், மாலைகளை தூக்கி வீசி ஆர்ப்பரித்தனர்.

தேருக்கு பின்னால் ஊர்வலமாக வந்த பக்தர்களுக்கு, பல்வேறு தன்னார்வ அமைப்புகள், இந்து அமைப் புகள், தனியார் நிறுவனங்கள் வழிநெடுக அன்னதானம், பழங்கள், தண்ணீர் பாட்டில்கள், குளிர்பானங்கள், மோர் போன்ற வற்றை வழங்கினர். சிலர் பிளாஸ்டிக் விசிறிகளையும், தொப்பிகளையும் வழங்கினர். அன்னதானம் வழங்கியவர்கள் புளியோதரை, எலுமிச்சை, தயிர் சாதம், வெஜிடபிள் பிரியாணி போன்றவற்றை தட்டுகளில் வைத்து தேரோட்டம் தொடங்கியது முதல் முடியும் வரை வழங்கினர்.

அதனால், தேர்கள் சென்ற பின்பு மாசி வீதிகளில் பூக்கள், உணவுக்கழிவு, தட்டுகள், தண்ணீர் பாட்டில்கள், பக்தர்கள் அணிந்திருந்த செருப் புகள் போன்றவை சிதறிக் கிடந்தன. அவற்றை, ஆணையர் சித்ரா ஏற்பாட்டில் நகர்நலப் பிரிவு உதவி அலுவலர் அபிஷேக் தலைமையில் 200 மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், 150 தற்காலிக பணியாளர்கள் குழுவினர், தேருக்கு முன்பும் பின்பும் சென்று தூய்மைப்பணியில் ஈடுபட்டனர். தேர் செல்வதற்கு முன் குப்பையில்லாமல் பார்த்துக் கொள்வதும், தேர் சென்ற பின்னர் குவிந்த குப்பையை உடனுக்குடன் அகற்றுவதுமாக தேர்த்திருவிழாவை சுகாதார மான விழாவாக மாநகராட்சி நிர்வாகம் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.தேர் கடந்து சென்றவுடன் தூய்மை பணி நடந்து குப்பையின்றி பளிச்சிடும் மாசி வீதிகள்.‹/ ஜீ›‹/பீவீஸ்›தேர் கடந்து சென்றவுடன் தூய்மை பணி நடந்து குப்பையின்றி பளிச்சிடும் மாசி வீதிகள். கடந்த காலங்களில், தேரோட்டத்தின்போது குவியும் குப்பையை மறுநாள் காலை யில்தான் மாநகராட்சி அகற்றும். அதுவரை குப்பை தேங்கி சுகாதார சீர்கேடாக காணப்படும்.கடந்த 2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாநகராட்சி ஆணையராக சித்ரா பொறுப்பேற்ற பிறகு நடந்த சித்திரைத் திருவிழாவில் குப்பை தேங்காமல் உடனுக்குடன் அகற்ற முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

மாநகராட்சியின் இந்த தூய்மைப் பணிக்கு கடந்த ஆண்டே மக்களிடம் பாராட்டுகள் கிடைத்தன. அதேபோல், இந்த ஆண்டும் குப்பையில்லா தேர்த் திருவிழா முடிந்துள்ளது. இதற்கு காரண மான ஆணையர் சித்ராவுக்கும், களத்தில் நின்று சவாலுடன் பணியாற்றிய நகர்நலப் பிரிவு உதவி அலுவலர் அபிஷேக், சுகாதார ஆய்வாளர் ரமேஷ், தூய்மைப் பணியாளர்களுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.இதுகுறித்து நகர்நலப் பிரிவு உதவி அலுவலர் அபிஷேக் கூறுகையில், தேர்த்திருவிழாவில் 350 பணி யாளர்கள் அப்புறப்படுத்திய குப்பையை 25 டிராக்டர்கள் மூலம் எல்லீஸ் நகருக்கு கொண்டு சென்று, அங்கிருந்து லாரிகள் மூலம் வெள்ளக்கல் கொண்டு செல்லப்பட்டது. தேர் நிலையை அடைந்தவுடன் மாசி வீதிகள் அனைத்தும் தூய்மையாகின. மொத்தம் 100 டன் குப்பையை அகற்றி உள்ளோம் என்றார்.

# பேரறிவாளனை வழக்கறிஞராக பதிவு செய்ததை திரும்பப் பெறவேண்டும்

## குடியரசுத் தலைவர், பிரதமருக்கு காங்கிரஸ் எம்.பி சுதா கடிதம்



சென்னை:மே. 01-

பேரறிவாளனை வழக்கறிஞராக பதிவு செய்துள்ள பார் கவுன்சிலின் உத்தரவை திரும்பப்பெற வலியுறுத்தி காங்கிரஸ் எம்.பி சுதா, குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் கடிதம் அனுப்பி உள்ளார். இதுதொடர்பாக மயிலாடுதுறை காங்கிரஸ் எம்.பி.யான வழக்கறிஞர் ஆர். சுதா, சென்னை உயர் நீதிமன்றத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது, ‘‘முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக மரண தண்டனை விதிக்கப்பட்ட பேறிவாளனை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்திருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன்.அது ஒரு கருப்பு நாள். பேரறிவாளன் குற்றமற்றவர் எனக்கூறி விடுதலை செய்யப்படவில்லை. மாறாக அவரை உச்ச நீதிமன்றம் கருணை அடிப்படையில்தான் முன்கூட்டி விடுவித்து உத்தரவிட்டது.அவரை வழக்கறிஞராகப் பதிவு செய்திருப்பது என்பது தவறான முன்னுதாரணமாகி விடும். எனவே பேரறிவாளனை வழக்கறிஞராக பதிவு செய்துள்ள பார் கவுன்சிலின் உத்தரவை திரும்பப்பெற வலியுறுத்தி குடியரசுத் தலைவர், பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். எனவே பேரறிவாளனின் வழக்கறிஞர் பதிவை சட்டப்படி ரத்து செய்ய வேண்டும்’’ என்றார்.சட்ட ரீதியாக தடை இல்லைஇந்நிலையில், இதுதொடர்பாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் உறுப்பினரும், இளம் வழக்கறிஞர்கள் பதிவு கமிட்டியின் தலைவருமான வழக்கறிஞர் கே.பாலு கூறும்போது, ‘‘முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் வழக்கறிஞராக தன்னை பதிவுசெய்து கொள்வதற்கு சட்ட ரீதியாக எந்த தடையும் இல்லை.

வழக்கறிஞர்கள் சட்டம் 1961 பிரிவு 24ஏ பிரகாரம் ஒருவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு அதற்கான தண்டனையை அனுபவித்து முடித்த 2 ஆண்டுகள் கழித்து வழக்கறிஞராக தன்னை பதிவு செய்து கொள்ளலாம். எனவே பேரறிவாளனை வழக்கறிஞராக பதிவு செய்ததில் எந்த சட்ட விதிமீறலும் இல்லை’’ என்றார்.

# வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு மே 2 முதல் மறுஉத்தரவு வரும் வரை போலீஸாருக்கு விடுப்பு கிடையாது

## டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்



சென்னை:மே. 01-

சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்புப் பணியை முன்னிட்டு மே 2 முதல் மறு உத்தரவு வரும் வரை போலீஸாருக்கு விடுப்பு கிடையாது என டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23ம் தேதி நடைபெற்றது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், சென்னையில் 3 வாக்கு எண்ணும் மையங்கள் உள்பட தமிழகம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்களில் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளன.இந்த மையங்களில் தமிழக காவல் துறையினர், துணை ராணுவப்படையினர் என 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மே 4ம் தேதி காலை 8 மணி முதல் வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது.

தமிழகத்தில் திமுக, அதிமுகபாஜக, தவெக, நாம் தமிழர் என 4 முனை போட்டி நிலவுகிறது. அன்றைய தினம், வெற்றி பெறுபவர்கள் கொண்டாட்டத்திலும், தோல்வி அடைபவர்கள் ஏமாற்றமும் அடைவார்கள்.இதனால் தொண்டர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கில் பிரச்சினை வந்து விடக்கூடாது என்பதற்காக பாதுகாப்பு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தீவிரப்படுத்தி வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக அனைத்து மாவட்ட போலீஸாருக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதில், ‘‘சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெறுகிறது. அன்றைய தினம் அதிகளவு போலீஸார் களப்பணியாற்ற வேண்டியுள்ளது.

எனவே, 2ம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை காவலர்கள் முதல் அதிகாரிகள் வரையாரும் விடுப்பு எடுக்கக் கூடாது.

மகப்பேறு, குழந்தை பராமரிப்பு, படிப்பு, அவசர காலம் மற்றும் மருத்துவ விடுப்பு எடுத்துக் கொள்ளலாம். விடுமுறையில் இருப்பவர்கள் 2ம் தேதிக்குள் பணிக்கு திரும்ப வேண்டும்’’ என டிஜிபி தெரிவித்துள்ளார்.

# ஜெயலலிதா, பழனிசாமியின் செயலராக இருந்த ஜெயஸ்ரீ முரளிதரன் விருப்ப ஓய்வு

சென்னை:மே. 01-



முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா, பழனிசாமியின் செயலராக இருந்த தற்போதைய சமூக நலத்துறை செயலர் ஜெயஸ்ரீ முரளிதரன் விருப்ப ஓய்வில் செல்கிறார்.

தமிழக அரசின் சமூக நலத்துறை செயலராக இருப்பவர் ஜெயஸ்ரீ முரளிதரன். 2002ம் ஆண்டு ஐஏஎஸ் அந்தஸ்து பெற்ற அதிகாரியான இவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிமுகப்படுத்திய முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்தியவர்.

முந்தைய அதிமுக ஆட்சிக்காலத்தில், ஜெயலலிதா முதல்வராக இருந்தபோதும், தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம், அவரைத் தொடர்ந்து பழனிசாமி முதல்வராக இருந்தபோதும் முதல்வரின் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்கும் செயலர் நிலை4 பொறுப்பில் பணியாற்றினார்.

இவர் 2027ம் ஆண்டு ஜனவரியில் ஓய்வு பெற இருந்த நிலையில், தற்போது விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்திருந்தார். அரசு அனுமதியளித்த நிலையில், இன்றுடன் ஓய்வு பெறுகிறார்.

சொந்த காரணங்களுக்காக அவர் ஓய்வில் செல்வதாக தகவல் வெளியாகி உள்ளது. திருச்சி மாவட்ட ஆட்சியராக இவர் இருந்தபோது, ஸ்ரீரங்கம் தொகுதியில் இருந்து ஜெயலலிதா தேர்வானார்.

அப்போது ஏற்பட்ட தொடர்பில், ஜெயலலிதா முதல்வரான பின்னர், செயலராக ஜெயஸ்ரீ முரளிதரன் நியமிக்கப்பட்டார். தற்போது செயல்படுத்தப்படும் முதல்வரின் காலை உணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கான உணவுப்பட்டியல் இவர் தயாரித்து வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

## மலிவான சீன இறக்குமதியால் நஷ்டம்

# 2,800 தனியார் நிறுவன ஊழியர்கள் பணிநீக்கம்



புதுடெல்லி: மே. 01-

சமூக வலைதளமான ‘ரெடிட்' பக்கத்தில் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் பகிர்ந்துள்ள பதிவு தொழில்துறை வட்டாரத்தில் பெரும் விவாதத்தைக்கிளப்பியுள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது: கடந்த 34 ஆண்டுகளாக இயங்கி வரும் எங்களது நிறுவனத்துக்கு, மை தயாரிப்பதற்கான 3 ஆலைகள் உள்ளன.இந்த நிலையில், சமீப காலமாகவே இந்தியச் சந்தையில் சீனாவில் இருந்து மிகக் குறைந்த விலையில் மை இறக்குமதி செய்யப்படுவது அதிகரித்து வருகிறது. அவர்களது விலையோடு ஒப்பிடுகையில் எங்களால் போட்டியிட முடிவதில்லை. இதனால் கடந்த 3 ஆண்டுகளாக எங்களது நிறுவனம் கடும் நஷ்டத்தைச் சந்தித்து வருகிறது. வேறு வழியின்றி 2 ஆலைகளை மூட நிர்வாகம் முடிவு செய்துள்ளது.இந்த கடினமான முடிவின் காரணமாக 1,934 நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் 896 ஒப்பந்தத் தொழிலாளர்கள் என மொத்தம் சுமார் 2,800க்கும் மேற்பட்டோர் வேலை இழந்துள்ளனர். மேலும், 72 பேர் கொண்ட நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பக் குழுவும் வெறும் 8 பேராகக் குறைக்கப்பட்டுள்ளது.பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை குறித்தும் எனக்கு வருத்தம் உள்ளது. ஊழியர்களுக்கு 3 முதல் 5 மாத கால ஊதியத்தை இழப்பீடாக வழங்க நான் பரிந்துரை செய்தேன். ஆனால் நிர்வாகம் மிகக் குறைந்த தொகையையே (2 வார ஊதியம் + பணிக் காலத்திற்கு ஏற்ப கூடுதல் தொகை) மட்டுமே அங்கீகரித்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். நிர்வாகத்தின் இந்த நடவடிக்கையில் கடும் அதிருப்தி அடைந்த அந்த அதிகாரி, அந்நிறுவனத்திலிருந்து விலகி ஜெர்மனிக்குச் செல்ல முடிவெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சிறைபிடிக்கப்பட்ட இலங்கை கடற்கொள்ளையர் யார்? போலீஸார் விசாரணையில் முக்கிய தகவல்



நாகப்பட்டினம்:மே. 01-

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி, தற்போது மீனவர்களால் சிறைபிடிக்கப்பட்டு அழைத்து வரப்பட்ட இலங்கை கடற்கொள்ளையர் குறித்த அதிர்ச்சித் தகவல்கள் கிடைத்துள்ளன.கடந்த 26ம் தேதி மீன்பிடிக்கச் சென்ற நாகை மீனவர்களை தாக்கி உடமைகளை கொ்ள்ளையடித்த போது ஏற்பட்ட மோதலில் இலங்கையைச் சேர்ந்த 3 கடற்கொள்ளையர்களில் ஒருவரை மீனவர்கள் சிறைபிடித்தனர். மற்ற இருவரும் படகில் தப்பினர்.பிடிபட்ட நபர் இலங்கை காங்கே சன்துறையைச் சேர்ந்த அயந்தன் என்பது தெரியவந்தது. பின்னர் அவரை கீழையூர் போலீஸாரிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர்.இந்தச் சம்பவம் தொடர்பாக வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இந்நிலையில், அயந்தன் குறித்து பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. அவரின் உண்மையான பெயர் அஜந்தன்என்பதும், இலங்கை பலாலியில் வசிப்பதும் தெரியவந்தது.மேலும், கடலில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீதான பெரும்பாலான தாக்குதலுக்கு இந்த அஜந்தன் மற்றும் அவரது சகோதரர்கள், சகோதரியின் மகன்கள்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

இவர்கள் தொடர்ச்சியாக தமிழக மீனவர்களைத் தாக்கி கொள்ளையடிக்கும் வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்கள் மீது இலங்கையில் கஞ்சா கடத்தல், அடிதடி, வழிப்பறி உள்ளிட்ட பல வழக்குகள் உள்ளன.அங்கு போலீஸ் கெடுபிடி அதிகமாக இருக்கும்போது கடலுக்கு வந்து, தமிழக மீனவர்களை தாக்கி பொருட்களை கொள்ளையடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.சம்பவம் நடந்த அன்று தப்பிச் சென்ற அவரது சகோதரியின் மகன்கள் 2 பேர், தங்கள் சொந்த ஊருக்கு செல்லாமல் தலைமறைவாகி விட்டனர். அவர்களை அங்குள்ள சிஜடி போலீஸார் தேடி வருகிறார்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அமைச்சர் கண்டனம் இதனிடையே இந்த விவகாரம் குறித்து இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டில் இலங்கை மீனவர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருப்பது மனித உரிமை மீறலாகும்.

இச்செயல் இருநாடுகளிடையே நிலவும் பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் உள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி சட்டவிரோதமாக மீன்பிடித்தாலும் இலங்கை மீனவர்கள் பெரும்பாலும் அவர்களை சகோதரத்துவ உணர்வுடன் அணுகி அமைதியான முறையில் நடந்து கொண்டுள்ளனர்.

தற்போது இலங்கை மீனவர் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து பாரபட்சமின்றி விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.



# மண்ணின் வாசம் மாறாத கோலப் போட்டி: கீரைக்காரன் தட்டில் சுடலைமாட சுவாமி கோவில் சித்திரை விழா

திசையன்விளை:மே. 01-

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அருகே உள்ள மகாதேவன் குளம், கீரைக்காரன் தட்டு அருள்மிகு ஸ்ரீ மூங்கிலடி சுடலைமாட சுவாமி திருக்கோவில் சித்திரை பெருங்கொடை விழா பக்திப் பெருக்குடன் நடைபெற்று வருகிறது.

இவ்விழாவை முன்னிட்டு, கிராமப்புறக் கலைகளையும் கலாச்சாரத்தையும் ஊக்குவிக்கும் வகையில் பிரம்மாண்டமான கோலப் போட்டிகள் நடத்தப்பட்டன. இப்போட்டியில் பங்கேற்றவர்களின் திறமைகளை மதிப்பீடு செய்து வெற்றியாளர்களைத் தேர்வு செய்வதற்காகச் சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதில், "சக்கர வியூகம்" பத்திரிகையின் நெல்லை மாவட்டச் செய்தியாளரும், 'தமிழினி' திரைப்படத் தயாரிப்பாளருமான டி.பி. சரவணன் மற்றும் திசையன்விளை கலைவாணி ஆகியோர் நடுவர்களாகப் பங்கேற்றனர். விழாவிற்கு வருகை தந்த அவர்களுக்குத் திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பில் பொன்னாடை அணிவித்துச் சிறப்பான முறையில் கௌரவிப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் ஊர் பொதுமக்கள் மற்றும் கோவில் நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.



# வரலாற்றுச் சுவடுகளைப் போற்றும் தென்காசி: மாங்குடி மருதனார் நினைவுத்தூணில் மாவட்ட நிர்வாகத்தின் மரியாதை

தென்காசி மே. 01-

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் ஏப்ரல் 29ம் நாள் 'தமிழ் கவிஞர்கள் நாள்' கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம், மாங்குடி கிராமத்தில் அமைந்துள்ள சங்ககாலப் புலவர் மாங்குடி மருதனார் அவர்களின் நினைவுத்தூணிற்கு அரசு சார்பில் சிறப்பு மரியாதை செய்யப்பட்டது.நிகழ்வில், தென்காசி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் நேரில் வருகை தந்து, மாங்குடி மருதனார் நினைவுத் தூணுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய புலவரின் நினைவைப் போற்றும் வகையில் இந்த நிகழ்வு அமைந்தது.இந்நிகழ்வில் தமிழ்வளர்ச்சித்துறை துணை இயக்குநர் (திருநெல்வேலி மண்டலம்) இளங்கோ, உதவி இயக்குநர் கனகலெட்சுமி, சங்கரன்கோவில் வட்டாட்சியர் ஆதிநாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயலெட்சுமி, விஜய கணபதி, மாங்குடி மன்ற தலைவர் மலைக்கனி, தமிழறிஞர் நிலவழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அரசுப் பணியாளர்கள் உட்படப் பொதுமக்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்றிய அரசு மருத்துவர்கள்

சென்னை: மே.01-

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தையை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் காப்பாற்றினர்.இதுதொடர்பாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவக் கண்காணிப்பாளர் பாஸ்கர், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மதிவாணன் ஆகியோர் கூறியதாவது: சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனையில் கடந்த மாதம் தனலட்சுமி என்ற பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது.மருத்துவமனையில் இருந்த ஒரு உபகரணத்தில் மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால், குழந்தையின் உடலில் 23 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டது.இதையடுத்து, குழந்தை மேல்சிகிச்சைக்காக சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.அப்போது, குழந்தையின் உடலில் சூடு குறைந்து போயிருந்தது. நாடி மெலிதாக துடித்துக் கொண்டிருந்தது.துரிதமாக செயல்பட்ட மருத்துவக் குழுவினர், உடனே குழந்தையின் உடலில் ஏற்பட்டிருந்த காயத்தை சுத்தப்படுத்தி, திசு சிகிச்சையும் மேற்கொண்டனர்.இதன் பிறகு, 4 நாட்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசத்தில் குழந்தை வைக்கப்பட்டது. தீக்காயத்தில் கிருமித் தொற்று இருந்ததால் ஆன்டிபயாடிக் மருந்துகள் தொடர்ந்து 14 நாட்கள் செலுத்தப்பட்டன.இதற்கிடையே, 3ம் நாளில் குழாய் மூலம் குழந்தைக்கு தாய்ப்பாலும் கொடுக்கப்பட்டது. பின்னர், படிப்படியாக பாலாடை வழியாகவும், நேரடியாகவும் தாய்ப்பால் கொடுக்கப்பட்டது. தினமும் காயத்தை சுத்தப்படுத்தி தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.24 நாட்களில் குழந்தை முழுமையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளது. குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# கோஹினூர் வைரத்தை திரும்பத் தருமாறு மன்னர் சார்லஸை வலியுறுத்துவேன்" நியூயார்க் மேயர் மம்தானி

நியூயார்க்: மே. 01-

வரலாற்று சிறப்பு மிக்க கோஹினூர் வைரத்தை மீண்டும் இந்தியாவிடம் வழங்குமாறு பிரிட்டன் மன்னர் சார்லஸிடம் வலியுறுத்த உள்ளதாக நியூயார்க் நகர மேயர் ஜோரான் மம்தானி கூறியுள்ளார்.பிரிட்டன் மன்னர் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமிலா ஆகியோர் அமெரிக்காவுக்கு சென்றுள்ளனர். அங்கு அந்நாட்டு அதிபர் டொனல்டு ட்ரம்ப்பை அவர்கள் சந்தித்தனர். வெள்ளை மாளிகையில் அவர்களுக்கு அமெரிக்கா அரசு முறை வரவேற்பை அளித்தது.இந்நிலையில், செய்தியாளர்களை சந்தித்த நியூயார்க் நகர மேயர் ஜோரான் மம்தானி கூறியதாவது: “மன்னர் சார்லஸ் உடன் தனித்து பேசும் வாய்ப்பு கிடைத்தால், கோஹினூர் வைரத்தை திரும்ப தருமாறு வலியுறுத்துவேன்” என்றார். அவரது இந்த கருத்து அமெரிக்க அரசியலில் விமர்சனங்களை எழுப்பி உள்ளது. மேயர் மம்தானி இது போல தெரிவித்திருக்க கூடாது என நியூயார்க் நகர அரசியலில் அனுபவம் கொண்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேயர் மம்தானி இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தச் சூழலில் கடந்த 2001 ல் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நினைவிடத்தில் மன்னர் சார்லஸ் மற்றும் ராணி கமிலா தம்பதியர் அஞ்சலி செலுத்தினர். அப்போது மன்னர் சார்லஸை மம்தானி சந்தித்தார். இருப்பினும் அந்த சந்திப்பில் அவர்கள் பேசியது என்ன என்ற விவரம் எதுவும் வெளியாகவில்லை.

கோஹினூர் வைரம்: ஆந்திர மாநில சுரங்கத்தில் இருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மிகப்பெரிய வைரம் வெட்டியெடுக்கப்பட்டது. அதற்கு கோஹினூர் என்று பெயர் வைத்தனர். தற்போது உலகிலேயே மிகப்பெரிய வைரமாக (105 கேரட்) கோஹினூர் உள்ளது. அதன் மதிப்பு 200 மில்லியன் டாலர் என்று கூறப்படுகிறது. கோஹினூர் வைரம் உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வைரங்களில் மிகவும் விலை உயர்ந்ததாக கருதப்படுகிறது. இது 14 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போதைய தெலங்காவின் வாரங்கலில் உள்ள ஒரு இந்து கோவிலில் தெய்வத்தின் ஒரு கண்ணாக பயன்படுத்தப்பட்டது. மாலிக் கஃபூர் (அலாவுதீன் கில்ஜியின் ஜெனரல்) அதை கொள்ளையடித்தார் என்றும், அதன்பின் முகலாயப் பேரரசின் பல ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்ட பிறகு, சீக்கிய மகாராஜா ரஞ்சித் சிங் லாகூரில் அதை வைத்திருந்தார். மகாராஜா ரஞ்சித் சிங்கின் மகன் திலீப் சிங் ஆட்சியின் போது 1849ல் விக்டோரியா மகாராணிக்கு வைரம் வழங்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.



# நெத்திமேடு காளியம்மன் கோயில் சித்திரை திருவிழா அன்னதானத்தில் கமகம சிக்கன் பிரியாணி

சேலம் (நெத்திமேடு):மே. 01-

சேலம், நெத்திமேடு பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் சித்திரை திருவிழா பக்திப் பெருக்குடன் நடைபெற்று வருகிறது. இறைபணி மன்றத்தின் 4ம் ஆண்டு வெற்றிப் படைப்பாக இந்த ஆண்டு விழா மிகச்சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

விழாவின் முக்கிய நிகழ்வான பொங்கல் வைத்தல், அக்னி கரகம் எடுத்தல் மற்றும் அலகு குத்துதல் போன்ற நேர்த்திக்கடன் வழிபாடுகள் கோலாகலமாக நடைபெற்றன. ஸ்ரீ மஹா காளியம்மன் நற்பணி மன்றம் மற்றும் ஸ்ரீ மஹா அன்னலட்சுமி நண்பர்கள் குழு இணைந்து , 1,801 நபர்களுக்கு கமகம சிக்கன் பிரியாணி அன்னதானமாக வழங்கப்பட்டது. கோயில் வளாகம் முழுவதும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது. பக்தர்களின் வருகை அதிகரித்துள்ள நிலையில், மீதமுள்ள நாட்களிலும் பல்வேறு ஆன்மீக நிகழ்வுகளுக்குக் கோயில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

# ஸ்பைஸ்ஜெட் விமானங்கள் திடீர் ரத்து: பயணிகள் தவிப்பு

மும்பை:மே. 01-

மும்பை சத்ரபதி சிவாஜி விமான நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய 3 ஸ்பைஸ்ஜெட் விமானங்கள் திடீர் ரத்து செய்யப்பட்டது. முன்னறிவிப்பின்றி விமானங்களை ரத்து செய்த ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்துக்கு பயணிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.



விமானங்களை இயக்குவதில் ஏற்பட்ட சிக்கல், மோசமான வானிலை காரணமாக விமானங்கள் ரத்து செய்யப்பட்டதாக ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் விளக்கமளித்துள்ளது. மும்பை டெல்லி, மும்பை கோரக்பூர், மும்பை பெங்களூரு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது

# இலவச மின்சாரத்துக்கு ரூ.17,300 கோடி மானியம்: தமிழக அரசுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு

சென்னை.மே.01-

தமிழகத்தில் வீடுகள், விவசாயம், கைத்தறி மற்றும் பல்வேறு பிரிவுகளுக்கு இலவச மற்றும் மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.இப்போதுள்ள நடைமுறைப்படி, வீடுகளுக்கு முதல் 100 யூனிட் மின்சாரம் இலவசமாகவும், 500 யூனிட் வரை மானிய விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரம், விவசாய இணைப்புகள் மற்றும் குடிசை வீடுகளுக்கு மின்சாரம் முழுமையாக இலவசமாக வழங்கப்படுகிறது. இதுதவிர, விசைத்தறிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற சில குறிப்பிட்ட வகை மின் இணைப்புகளுக்கும் அரசு மானிய விலையிலேயே மின்சாரத்தை விநியோகம் செய்கிறது. இவ்வாறு பல்வேறு பிரிவினருக்கு சலுகை




விலையில் மின்சாரம் வழங்குவதால் மின் வாரியத்துக்கு ஏற்படும் நிதிச் சுமையை ஈடுகட்ட, ஆண்டு தோறும் அரசு மானியத் தொகையை வழங்க வேண்டும்.இந்த மானியத் தொகையை எவ்வளவு வழங்க வேண்டும் என்பதை மின்சார ஒழுங்குமுறை ஆணையமே ஆய்வு செய்து நிர்ணயம் செய்கிறது. அதன்படி, 202627ம் நிதியாண்டுக்காக, வீடு உள்ளிட்ட மொத்தம் 14 பிரிவுகளின் கீழ் ரூ.17,307 கோடி அரசு வழங்க வேண்டும் என ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதில், வீடுகளுக்கான மின்பயன்பாட்டுக்கு மட்டும் அதிகபட்சமாக ரூ.8,428 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முழுத் தொகையையும் 4 காலாண்டுகளாக பிரித்து, ஒவ்வொரு காலாண்டுக்கும் தனித்தனி தவணைகளாக மின் வாரியத்திடம் அரசு ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இமாச்சல பிரதேசத்தில் பள்ளத்தில் பாய்ந்த கார்

இமாச்சலமே. 01-

இமாச்சலப் பிரதேசம்: இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மலைப்பாதையில் அதிவேகமாக சென்ற கார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து சி.சி.டி.வி. கேமராவில் பதிவாகியுள்ளது. டயர் வெடித்ததால் விபத்து ஏற்பட்டதாக கூறப்படும் நிலையில், காரில் இருந்த இருவர் உயிரிழந்தனர்



■ சேலம் மாவட்டம். ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரியில் அமைந்துள்ள வாக்கு எண்ணும் மையத்தின் இருப்பறையில் காவல்துறை பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளதை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000